# நவம்பர் – 18 – சனி

## திருத்தூதர்களான புனித பேதுரு புனித பவுல் பேராலய நேர்ந்தளிப்பு

## “மனம் தளராமல் எப்பொழுதும் இறைவனிடம் மன்றாட வேண்டும்” (லூக்.18:1)

**முதல் வாசகம்: சாலமோனின் ஞானம்18:14–16,19:6- 9**

எல்லாம் அமைதியில் ஆழ்ந்திருந்தபோது, நள்ளிரவு கடந்துவிட்ட வேளையில், எல்லாம் வல்ல உம் சொல் விண்ணகத்திலுள்ள அரியணையைவிட்டு எழுந்து, அஞ்சா நெஞ்சம் கொண்ட போர் வீரனைப்போல் அழிவுக்கெனக் குறிக்கப்பட்ட நாட்டின்மீது வந்து பாய்ந்தது. உமது தெளிவான கட்டளையாகிய கூரிய வாளை ஏந்திய வண்ணம் அது நின்று கொண்டு, எல்லாவற்றையும் சாவினால் நிரப்பியது. மண்ணுகத்தில் கால் ஊன்றியிருந்த போதிலும், விண்ணகத்தை தொட்டுக் கொண்டிருந்தது. உம் பிள்ளைகள் தீங்கின்றிக் காக்கப்படும்படி, படைப்பு முழுவதும் உம் கட்டளைகளுக்குப் பணிந்து, மீண்டும் தன் இயல்பில் புத்துயிர்ப் பெற்றது. அவர்களது பாசறைக்கு முகில் நிழல் கொடுத்தது. முன்பு தண்ணீர் இருந்த இடத்தில் பின்பு உலர்ந்த தரை தோன்றிற்று. செய்கடலினூடே தங்குதடைஇல்லாத வழியும், சீறிப்பாயும் அலைகளினூடே புல்திடலும் உண்டாயின. உமது கைவன்மையால் காப்பாற்றப்பட்ட மக்கள் அனைவரும் அவ்வழியே கடந்து சென்றனர். உம்முடைய வியத்தகு செயல்களை உற்று நோக்கிய வண்ணம் சென்றனர். குதிரைகளைப் போலக் குதித்துக்கொண்டும், ஆட்டுக்குட்டிகளைப் போலத் துள்ளிக் கொண்டும், தங்களை விடுவித்த ஆண்டவராகிய உம்மைப் புகழ்ந்து கொண்டே சென்றனர்.

**பதில்பாடல் :** ஆண்டவர் செய்த வியத்தக செயல்களை
நினைவு கூருங்கள்

**நற்செய்தி : லூக்கா 18 : 1 - 8**

மனந்தளராமல் எப்பொழுதும் இறைவனிடம் மன்றாட வேண்டும் என்பதற்கு அக்காலத்தில் இயேசு ஓர் உவமை சொன்னார். ”ஒரு நகரில் நடுவர் ஒருவர் இருந்தார். அவர் கடவுளுக்கு அஞ்சி நடப்பதில்லை மக்களையும் மதிப்பதில்லை. அந்நகரில் கைம்பெண் ஒருவரும் இருந்தார். அவர் நடுவரிடம் போய், ”என் எதிரியைத் தண்டித்து எனக்கு நீதி வழங்கும்” என்று கேட்டுக் கொண்டேயிருந்தார். நடுவரோ, நெடுங்காலமாய் எதுவும் செய்ய விரும்பவில்லை. பின்பு அவர், ”நான் கடவுளுக்கு அஞ்சுவதில்லை. மக்களையும் மதிப்பதில்லை. என்றாலும் இக்கைம்பெண் எனக்குத் தொல்லை கொடுத்துக்கொண்டிருப்பதால் நான் இவருக்கு நீதி வழங்குவேன். இல்லையானால் இவர் என் உயிரை வாங்கிக் கொண்டேயிருப்பார்” என்று தமக்குள்ளே சொல்லிக்கொண்டார்.” பின் ஆண்டவர் அவர்களிடம், ”நேர்மையற்ற நடுவரே இப்படிச் சொன்னாரென்றால், தாம் தேர்ந்துகொண்டவர்கள் அல்லும் பகலும் தம்மை நோக்கிக் கூக்குரலிடும்போது கடவுள் அவர்களுக்கு நீதி வழங்காமல் இருப்பாரா? அவர்களுக்குத் துணைசெய்யக் காலம் தாழ்த்துவாரா? விரைவில் அவர்களுக்கு நீதி வழங்குவார் என நான் உங்களுக்குச் சொல்கிறேன். ஆயினும் மானிடமகன் வரும்போது மண்ணுலகில் நம்பிக்கையைக் காண்பாரோ?” என்றார்.

**தியானம்:** விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் ஆம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் மீது நாம் கொள்ளும் அசைக்க முடியாத நம்பிக்கையே நம்மை இந்த உலகை வென்றவர்களாக மாற்றும். நம்பிக்கை என்றால் என்ன என்பதற்கு எபிரேயருக்கு எழுதப்பட்ட மடலில் இவ்வாறு விளக்கம் கூறப்பட்டிருக்கின்றது. “நம்பிக்கையினாலன்றி எவரும் கடவுளுக்கு ஏற்புடையவராயிருக்க முடியாது. ஏனெனில் கடவுளை அணுகிச் செல்வோர் அவர் இருக்கிறார் என்பதையும் அவரைத் தேடிச் செல்வோருக்குத் தக்க கைம்மாறு அளிக்கிறார் என்பதையும் நம்ப வேண்டும்’’ எபி.11:6. நாம் வணங்கி, துதித்து, ஆராதிக்கும் கடவுள் உயிருள்ள கடவுள், விண்ணையும் மண்ணையும் உண்டாக்கிய அதிபதி, எல்லாவற்றும் ஆதாரமானவர், ஆண்டவர்தாமே அவருடைய மக்களின் வலிமை, அவரால் ஆகாதது ஒன்றும் இல்லை லூக்.1:37 என்று நம்புவதுதான் விசுவாசத்தின் முதல்படி. “பால்குடிக்கும் தன் மகவைத் தாய் மறப்பாளோ? கருத்தாங்கினவள் தன் பிள்ளைமீது இரக்கம் காட்டாதிருப்பாளோ? இவர்கள் மறந்திடினும் நான் உன்னை மறக்கவே மாட்டேன். இதோ, என் உள்ளங்கைகளில் உன்னை நான் பொறித்து வைத்துள்ளேன். உன் சுவர்கள் எப்பொழுதும் என் கண்முன் நிற்கின்றன’’ எசா.49:15-16 என்ற வாக்குத்தத்தத்தை கொடுத்த தேவன் தன்னை நோக்கிக் கூக்குரலிடும் மானிடரின் குரலைக் கேட்காமல் இருக்க மாட்டார். “கடவுளை நாடித் தேடுகிறவர்களே உங்கள் உள்ளம் ஊக்கமடைவதாக. ஆண்டவர் ஏழைகளின் விண்ணப்பத்திற்கு செவிசாய்கின்றார்.’’ திபா.69:32-33 கடவுள் நம்முடைய அன்பான தந்தை எனவே அவர் நம்மை ஒருபோதும் கைவிடுவதுமில்லை நம்மைவிட்டு விலகுவதுமில்லை எபி.13:5. எனவே நம்முடைய நம்பிக்கையால் உலகை வெல்ல வேண்டும். “என்னை நோக்கி மன்றாடு உனக்கு நான் செவிசாய்ப்பேன். நீ அறிந்திராத மாபெரும் செயல்களையும் மறைபொருள்களையும் உனக்கு நான் விளக்கிக் கூறுவேன்.’’ எரே.33:3 என்ற நமதாண்டவரின் வார்த்தைளை நம்மனதில் இருத்தி நம் வாழ்வின் பிரச்சனைகள் மத்தியில் மனிதர்களின் கைகளில் வீழ்ந்துவிடாமல் கடவுளிலே நம் நம்பிக்கையை வைத்து அவரை நோக்கி நம்முடைய குரலை உயர்த்துவோம்.